# மக்கள் மறுவாழ்வு

மலர்: 5 புரட்டாசி-செப்டம்பர் 1987 விலை 75 காசுகள் இதழ்: 12

# இந்திய-இலங்கை ஒப்பந்தம் : மலையகத் தமிழர் பாதுகாப்பும் உரிமைக்கு உத்தரவாதமில்லை !

**இலங்கை மலையகம் வாழ் தமிழ் மக்களின் அரசியல் சமத்துவத்திற்கும் உயிர், உடமை பாதுகாப்புக்கும் உடன்படிக்கையில் உத்தரவாதம் இல்லை. இந்தியர்களாக்கப்பட்ட மலையக மக்கள் நாடு கடத்துவதற்கு மட்டுமே உத்தரவாதம் தரப்பட்டுள்ளது. இதனால் தமிழ்மக்களின் மத்தியில் சில அச்சங்கள் உதித்துள்ளது என்றாலும் பாதுகாப்புக்கும் உரிமைக்கும் உத்தரவாதம் கிடைக்குமென்று நம்புகிறோம். இவ்வாறு மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அவ்வறிக்கையில் விபரம் வருமாறு:**

1987 ஜுலை 29ம் நாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களும் இலங்கை ஜனாதிபதி ஜயவர்தனா அவர்களும் செய்து கொண்ட உடன்படிக்கையை முழு மனதாக வரவேற்கிறது. இந்த உடன்படிக்கையை உருவாக்கிய இரு அரசியல் தலைவர்களையும் மனமாரப் பாராட்டுகிறது.

முதலாவதாக ஐரோப்பிய காலனித்துவ ஆட்சிக்காலத்தில், வரலாற்றுக்கால முதல் ஒரே புவியியல், வர்த்தக, அரசியல் கலாச்சார அமைப்புக்குள் ஒரே பேருணர்வுக்குள் ஒன்றுபட்டு வாழ்ந்த இலங்கை மக்கள் அந்நியப் படுத்தப்பட்டார்கள். ஏகாதிபத்திய அரசியல் குறிக்கோள்களுக்காக இலங்கையை ஒரு ‘சின்ன இங்கிலாந்தாக’ வளர்த்தார்கள். காலப் போக்கில் பொருளாதார, வர்த்தக, இனவாத அடிப்படையில் இந்திய எதிர்ப்பு நாடாக இலங்கை உருவாக வித்திட்டார்கள். இந்த வரலாற்று விரோத சூழ்நிலையிலிருந்து மாற்றி இலங்கை - இந்தியத்துணைக்கண்டத்தோடு அரசியல் நல்லுறவு பூணவும், இனவாதத்தைப் பரிபூரணமாக அகற்றவும் வழிவகுக்கும் வரலாற்றுச் சாதனமாக இலங்கை இந்திய உடன்பாடு அமைகிறது.

இந்த வரலாற்றுத் திருப்பத்தை நாம் வரவேற்கிறோம்.

இலங்கை வாழ் தமிழ் மக்கள் இனவாதஅரசியலால் பல்லாண்டுகளாக அலைக்கழிக்கப்பட்டிருந்த போதிலும், கடந்த நான்காண்டுகளாக இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டிருந்து கொடிய சூழ்நிலையிருந்து பாதுகாத்து, தன்மானமுள்ள அரசியமைப்புக்குள் வாழவ செய்துள்ள அமைதிகாக்கு ஒப்பந்தம் என்ற அடிப்படையில் இந்த ஒப்பந்தம், தமிழ் மக்களின் ஏகோபித்த ஒப்புதலைப் பெற்றுள்ளது.

புதிய சமத்துவ வாழ்வுக்கும், புதிய சமாதான உறவுக்கும் சிங்கள - தமிழ்மக்களை அறைகூவி அழைக்கும் ஒரு வரலாற்றுக்குரலாக அமைந்துள்ள உடன் படிக்கை என்பதாலும் எங்கள் மன்றம் இந்த உடன்படிக்கையை வரவேற்கிறது.

எனினும் இலங்கைமலையகம் வாழ் தமிழ் மக்களின் அரசியல் சமத்துவத்திற்கும் உயிர், உடமை பாதுகாப்புக்கும் இந்த உடன்படிக்கையில் உத்திரவாதமில்லை இந்தியர்களாக்கப்பட்ட மலையக மக்களை நாடுகடத்துவதற்கு உத்திரவாதம் தரப்பட்டுள்ளது. இதனால் மலையகத்தமிழ் மக்கள் மத்தியில் சில அச்சங்கள் உதிப்பினும், பரந்த இலங்கை - இந்திய நல்லுறவின் அடிப்படையிலும் தமிழ் - சிங்கள மத்தியில் உருவாகவிருக்கும், அமைதி, சமத்துவம் என்ற அடிப்படையிலும் நோக்கும் பொழுது மலையகத் தமிழ் மக்களின் சமத்துவமும், அடிப்படை உரிமைகளும் பாதுகாக்கப்படுவதோடு மட்டுமன்றி, உறுதி செய்யப்படும் என்ற நம்பிக்கையில் இந்தஉடன் படிக்கையை நாம் வரவேற்பதோடு, ஒப்பந்த அடிப்படைகள் நிறைவேற்றப் படுவதற்கான அனைத்து ஒத்துழைப்பும் நல்கவேண்டுமென அனைத்து மக்களுக்கும் வேண்டுகோள்விடுக்கிறோம். ○

மக்கள் மறுவாழ்வு

மலர்: 5 புரட்டாசி-செப்டம்பர் '87 இதழ்: 12

## வந்தோர் வாழ்வும் வர இருப்போர் எதிர்காலமும்

சிரிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தாயகம் திரும்பியோர் இதுவரை சுமார் ஐந்து லட்சம் பேர்களாவர். இவர்களுக்கு பல்வேறு பட்ட திட்டங்களின் கீழ் மறுவாழ்வு உதவிகள் அளிக்கப்பட்டாலும் இவர்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினரே பலன் பெற்றிருக்கிறார்கள்.

பெரும்பான்மையோர் உரிய மறுவாழ்வு உதவிகள் காலத்தில், உரிய முறையில் பெறத் தவறிவிட்டார்கள் மறுவாழ்வுத் திட்டங்களின் பலர் தோல்வியே அடைந்து வறுமைக் கோட்டிற்கும் கீழ் நிலையில் நின்று கொண்டிருக்கிறார்கள்.

இதற்கிடையில், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இலங்கையில் சகஜ நிலை ஏற்பட்டதால் - அங்கு நிறுத்தி வைக்கப்பட்டு வர இருப்பவர்களும் ஜனவரியிலிருந்து வருவார்கள் என்று எதிர்பார்க்கப்கிறது.

நமது கேள்வி, வந்தவர்களுக்கே உரிய முறையில் மறுவாழ்வு அளிக்கத் தவறிவிட்ட நிலையில்-வந்தவர்கள் தமது புதிய வாழ்வை அமைத்துக் கொள்ள முடியாமல் திணறும்நிலையில் இனி வரப்போகிறவர்களை அழைத்து அவதிக்குள்ளாக்க வேண்டுமா? என்பதுதான்.

முதலில் இவர்கள் பூர்ணமாக தங்கள் மறுவாழ்வு உதவிகளை பெற்று முழுமையான பலன் பெற வேண்டும்-பின்னர் அவர்கள் அழைக்கப்பட வேண்டும் என்பது தான் எமது கோரிக்கை.

இவர்களுக்கு அளிக்கப்பட்ட மறுவாழ்வு உதவிகள் குறித்தும், போடப்பட்ட திட்டங்கள் குறித்தும்-இவற்றின் மூலம் இவர்கள் பெற்ற பலன்கள், வாழ்க்கைத்தரம் குறித்து ஒரு மீளாய்வினை உடனடியாக மேற்கொண்டு இதுவரை பல காரணங்களால் உதவிகள் பெறத் தவறியவர்களுக்கு-பல காரணங்களால் பெற்ற உதவிகளை அனுபவிக்க முடியாது போனவர்களுக்கு - பெற முடியாது இருக்கிறவர்களுக்கும் - பொதுவாக வறுமைக்கோட்டிற்கு கீழ் நிற்க அனைவருக்குமே உரிய மாற்றுதவிகள் அளிக்கப்பட்ட வேண்டும்.

இவர்களுக்கு முழுமையான வாழ்வுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பின்னரே வர இருப்பவர்கள் அழைக்கப்பட வேண்டும்.

தாயகம் திரும்பியோரிடம் செய்யும் மீளாய்வின் படிப்பினையைக் கொண்டு வர இருக்கிறவர்களிடத்தில் இந்த மறுவாழ்வு உதவிகள் அளிப்பதில், குறுக்கீடுகள், முறைகேடுகள், இடர்பாடுகள் ஏற்படாமல் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். புதுவகையில் திட்டங்கள் தீட்டி மறுவாழ்வு அளிக்கவேண்டும்.

அதற்கேற்ப மறுவாழ்வுத் திட்டங்களையும் - செயல் முறைகளையும் ஏற்படுத்தி தாயகம் திரும்பியோர் வாழ்வு மலர நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

## திருச்சியில் கருத்தரங்கம்

ஆகஸ்ட் 15ந்தேதி திருச்சி பிஷப் இல்லத்தில் தாயகம் திரும்பியோர் பற்றிய கருத்தரங்கம் ஒன்றை தமிழ்நாடு தாயகம் திரும்பியோர்மற்றும் அகதிகள் சேவைக்கான திருமறை சபை (டெக்ராஸ்) நடத்தியது.

இந்த கருத்தரங்கில் பின் வரும் விடயங்கள் செயல்பட வேண்டும் என்று வழியுறுத்தப் பட்டது

தாயகம் திரும்பியோர், அகதிகள் மத்தியில் மனித உரிமை உரிமைகளை நிலை நிறுத்த அரசு தக்க வழி வகைகளை ஏற்படுத்த வேண்டும்.

அகதிகள் தங்கள் தாயகத்திற்கு பாதுகாப்போடும், மரியாதையோடும் திரும்பிச் செல்லவும் அவர்களுக்கு உரிய மறுவாழ்வு உதவிகளை வழங்கவும் இலங்கை அரசு மூலம் இராஜரீதயான உறவுகளை இந்திய அரசு ஏற்படுத்தி தகுந்த வழிகளை செய்ய வேண்டும்.

ஒப்பநதப்படி தாயகம் திரும்பியோர்களின் நல்வாழ்வுக்கு உரிய முழு மறுவாழ்வு உதவிகள் கிடைக்க உரிய உத்தரவாதங்களை செய்த பின்னரே இன்னும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்ப இருப்போரை இங்கு அழைக்க வேண்டும்.

தாயகம் திரும்பியோர்களின் வாழ்க்கையையும், அளிக்கப் மறுவாழ்வு திட்டங்களையும் உதவிகளையும் மீளாய்வு செய்து எங்கெங்கு தாயகம் திரும்பியோர் உரிய முறையில் மறுவாழ்வு உதவிகளை அனுபவிக்க முடியாமல் அவதியுறுகிறவர்களுக்கு மாற்றுதவிகள் அளிக்கப்பட வேண்டும்.

தாயகம் திரும்பியோர் தேசிய நீரோட்டத்தில் கலந்து தங்கள் குடியியல் உரிமைகளை பூர்ணமாக அனுபவிக்கும் வகையில், இவர்களுக்கு அளிக்கப்படும் எல்லா விதமான மறுவாழ்வு திட்டங்களை முறைப்படுத்த அரசு முனைய வேண்டும்.

தாயகம் திரும்பியோர்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

தாயகம் திரும்பியோர் மறுவாழ்வுத்திட்டங்கள் செயல்படுத்துவதில் தொண்டு நிறுவனங்களையும் ஒன்றிணைக்க இந்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தாயகம் திரும்பிய மக்கள் இங்கு அனைத்து குடியியல் உரிமைகளையும் சரிசமமாக அனுபவிக்க எல்லா அரசியல், கட்சிகள், தொண்டு நிறுவனங்களும் ஏற்று உதவ வேண்டும்

- முதலான கோரிக்கைகளை முன் வைத்து வலியுறுத்தின.

இந்த கருத்தரங்கள் பல சமூக நல அமைப்புகள் கலந்துக் கொண்டதோடு, பத்திரிகையாளர்களும் கலந்து கொண்டு தமது தீர்க்கமான கருத்துக்களை முன் வைத்தனர். O

மக்கள் மறுவாழ்வு

### சந்தா விபரம்

தனிப்பிரதி 75 காசுகள்

ஆண்டுச்சந்தா ரூ. 10-00

மாதிரி பிரதி வேண்டுவோர் ரூபா 1-க்கான அஞ்சல் தலை அனுப்பிப் பெறலாம்.

விபரங்களுக்கு :

மக்கள் மறுவாழ்வு

அ பை. எண்: 5560

சென்னை-600094

# 'அழியும் காடுகளைக் காப்பாற்ற விடுங்கள் !'

## மாதர் கூட்டத்தில் கோரிக்கை

ஜூலை 28ந் தேதி நீலகிரி, கோத்த கிரியில் என்றும் கண்டிராத அளவில் மிகப்பெரிய ஊர்வலம் நடைபெற்றது. அதுவும் பெண்கள் ஊர்வலம்.

பெண் உரிமைக் கோரியும், பெண்கள் நல்வாழ்வுக்கு வழி சமைக்கும் லட்சியத்தோடு இந்த ஊர்வலம். இடம் பெற்றது.

இந்தஊர்வலத்திற்கு,கோத்த கிரியைச் சுற்றி மூலை முடுக்கெல்லாம் சென்று குடியேறியுள்ள தாயகம் திரும்பியோர் குடியிருப்புகளிலிருந் தெல்லாம் பெண்கள் திரள் திரளாக வந்து கலந்துக் கொண்டனர்.

பெண்கள் தங்கள் உரிமைகளுக்காக மட்டுமல்ல; பல பொது பிரச்சனைகள் குறித்தும் தங்கள் கோஷங்களில் கோரிக்கைகளில் முன்வைத்தனர்.

'நீலகிரியை காப்பாற்றுங்கள்' என்பது அவர்கள் கையில் ஏந்திச் சென்ற கோரிக்கைகளில் ஒன்று. நீலகிரியின் பச்சை பசேரென்றிருக்கும் மரகதக் காடுகளில் மரங்கள் அழிக்கப்பட்டு வருகிறது. இயற்கையை அழிப்பதன் மூலம் பணம் பண்ண முடிந்த பெரிய மனிதர்கள் நீலகிரி காடுகளை அளித்து வருகின்றனர். ஏழைகளைப் பொறுத்த வரை அவர்களது வாழ்வு இயற்கையிலும் அவற்றைக் காப்பதிலும் தங்கி இருக்கிறது. ஆதலாலே தாயகம் திரும்பிய பெண்கள், 'சட்ட விரோதமாக மரங்களை வெட்டுவது, விற்பனை செய்வது மூலம் அழியும் சுற்றுப்புறச்சூழலில் இருந்து நீலகிரியை காப்பாற்ற எங்களை விடுங்கள்' எனக் கோரிக்கை-கோஷம் விடுத்தனர்.

அன்றைய தினம் ஜெசுட் அகதிகள் சேவை அமைப்பின் ஆதரவில் அய்லண்ட் அறக்கட்டளையால் கட்டப்பட்ட புதிய மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. அம்மண்டபத்திலே பெண்கள் தயாரித்த கைவினைப் பொருட்கள் கண்காட்சி ஒன்றும் இடம் பெற்றது, 'மது அருந்துவதால் ஏற்படும் தீமை' என்ற அம்சம் முக்கியமாக இடம் பெற்றது.

ஊர்வலக்திற்கு பின்னர் நேரு பூங்காவில் பொது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாவலாசிரியை திருமதி இராஜம் கிருஷ்ணன், திருச்சியைச் சேர்ந்த பாரதி கண்ணம்மாள் மற்றும் தாயகம் திரும்பியோர் ஆய்வு மற்றும் தகவல் நிலைய இயக்குனர் திரு. ஆர். ஆர். சிவலிங்கம் முதலானோர் தமது கருத்துகளை வழங்கினர்.

மேற்படி பெண்கள் மகாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன-

### தீர்மானங்கள்

1. இப்பேரணி மாதர்களுக்கு கல்வியிலும். தொழில் வாய்ப்பிலும், சம்பளம் வழங்குவதிலும் சமத்துவ உரிமைகள் மாதர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனக்கோருகிறது.

2. மாதர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறிப்பாக வரதட்சனைக் கொடுமைகள், அவர்களின் தன்மானத்துக்கெதிராக மேற் கொள்ளப்பட்டு வரும் அநீதிகள் உடனடியாக ஒழிக்கப்பட வேண்டும் என வற்புறுத்திக் கோருகிறது.

3. நீலகிரி மாவட்டத்தில் படிப்படியாக தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. இதனை வன்மையாக இப்பேரணி கண்டிக்கிறது. ஏனைய மக்களைப் போன்றே குடிவாழ்வு உரிமைகள் நாடு திரும்பிய மக்களுக்கு வழங்கப்படவேண்டும் என அரசையும் நிர்வாகத்தையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.



கோத்தகிரி வீதியில் மாதர்கள் அணிவகுத்து செல்லும் காட்சி

4. தாயகம் திரும்பியோருக்கு நிலப்பட்டாக்கள் அற்பக் காரணங்களைக் காட்டி மறுக்கப்பட்டு வருகின்றன. கொடுக்கப்பட்ட பட்டா நிலங்களில் வீடு கட்டும் உரிமை மறுக்கப்படுகிறது. வழங்கப்பட்ட பட்டாக்கள் போலிக்காரணங்களில் அடிப்படையில் ரத்து செய்யப் படுகின்றன. இந்த அநீதி உடனடியாக நீக்கப்பட வேண்டும் என இப்பேரணி வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

5. இப்பேரணி மக்களைப் பிரிக்கும் சக்திகளை வன்மையாகக் கண்டிக்கிறது. மக்களை ஒன்று படுத்தி உழைப்பாளர்களை உயர்த்தும் எல்லா கூட்டு முயற்சிகளுக்கும் எங்கள் பேரணி தொடர்ந்து ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கும் என தீர்மானிக்கிறோம்.

6. தாயகம் திரும்பிய மக்கள் இந்தியாவில் குடியேறி 20 ஆண்டுகள் கழிந்த பின்னரும் எங்களை 'இலங்கை அகதிகள்' என்றே அழைக்கும் அறியாமையையும் மௌடீகத்தையும் வன்மையாகக்கண்டிக்கிறோம். நாங்களும் இந்தியர்களே என்பதை ஆழமாக அர்த்தமாக நிலைநாட்டுவோம் என்று தீர்மானிக்கிறோம்.

7. உலகமெங்கும் போர்ச் சக்திகளும் ஒழிந்து உலக சமாதானம் ஓங்குவதற்காக மக்கள் ஒன்று திரள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

8. நமது அண்டை நாடான இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் இனக்கொலை நடவடிக்கைகளை அழுத்தம் திருத்தமாக கண்டிக்கிறோம். இந்திய அரசின் முயற்சியோடு இலங்கையில் இனப் பிரச்சனைக்கு தீர்வு காண மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் வெற்றிபெற வேண்டுகிறோம்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளது. O


# இந்திய - இலங்கை ஒப்பந்த முழு விவரம்

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் கையெழுத்திட்ட 6 பக்க ஒப்பந்தத்தின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

இந்த்ய - இலங்கை ஒப்பந்தம் இரண்டு பகுதிகளையும் உடையதாகும். முதல் பகுதி ஒப்பந்தப் பகுதி ஆகும். இரண்டாவது பகுதி அதன் இணைப்பு ஆகும்.

### ஒப்பந்தம்

பாரம்பர்யமான இந்திய-இலங்கை நட்புறவை வலுப்படுத்துவதும், வளர்ப்பதும் அத்தியாவசியமானது என்பதையும், இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதின் அவசியத்தையும் இனப் பிரச்சினையின் உடன் விளைவான வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதின் அவசியத்தையும் உணர்ந்து அனைத்து மக்களின் நலனுக்காக (இன்று) புதனன்று இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படுகிறது.




இதன் தொடர்பாக, (1-1) இலங்கையின் ஒற்றுமை, இறையாண்மை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றை பராமரிப்பதில் ஆர்வம் கொண்டு. (1-2) இலங்கை பல இன. பல மொழி பேசும் மக்களை அதாவது சிங்களர், தமிழர், முஸ்லிம்கள், பர்ஹர்கள் ஆகியோரைக் கொண்டது என்பதையும் அங்கரித்து (1-3) ஒவ்வொரு இனமும் தனி கலாசார. மொழியை கொண்டது. அவற்றை வளர்ப்பது அவசியம் என்பதை ஏற்று, (1-4) இலங்கைத் தமிழர்களின் சரித்திர பூர்வமான வசிப்பிடமாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் இருந்து வந்திருக்கிறது. இங்கு மற்ற இனத்தவருடன் தமிழர்கள் சேர்ந்து வாழ்கிறார்கள் என்பதையும் அங்கீகரித்து. (1-5) இலங்கையின் ஒற்றுமை ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவற்றை பலப்படுத்துவதின் அவசியத்தைஉணர்ந்து, இலங்கையின் பல இன, பல மொழி, மதங்கள் கொண்ட சமுகத்தின் தன்மையை பாதுகாப்பதின் தேவையையும் உணர்ந்து அதன் அனைத்து குடிமக்களும் உரிமைகளுடனும், மகிழ்ச்சியோடும் வாழ கீழ்க்கண்டவாறு முடிவு செய்யப்படுகிறது.

2 (2-1) கீழ்க்கண்டவாறு வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரே நிர்வாகப் பகுதியாக இணையவும், அவைகளை பொதுமக்கள் வாக்கெடுப்பு மூலம் தனியாகப் பிரிக்கவும், அனுமதிக்க இலங்கை அரசு தீர்மானிக்கிறது.

(2-2) மாகாண கவுன்சிலுக்கான தேர்தல் தேதிக்கும், பொதுமக்கள் வாக்கெடுப்பு தேதிக்கும், (2-3) இடைப்பட்டகாலம் இடைக்காலமாககருதப்படும். இந்தக் காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரே நிர்வாகப் பகுதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண கவுன்சிலுடனுக்இயங்கும் இந்த ஒரே நிர்வாகப் பகுதிக்கு ஒரு கவர்னர், ஒரு முதல்வர், ஒரு அமைச்சரவையும் இருக்கும்.

(2-3) 1988-ம் ஆண்டு டிசம்பர் 31ந் தேதியோ அதற்கு முன்னரோ ஒரு பொது மக்கள் வாக்கெடுப்பு நடைபெறும். இந்த வாக்கெடுப்பு, (ஏ) வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணம் ஒரே நிர்வாகப் பகுதியாக இணைந்து இருப்பதா? தொடர்ந்து 2-2ல் கண்டுள்ளப்படி ஆளப்படுவதா அல்லது (பி) தனி நிர்வாகப் பகுதியாக தனக்கென தனி மாகாணக் கவுன்சில், தனி கவர்னர், தனி முதல்வர், தனி அமைச்சரவையுடன் இயங்குவதா என்பதைத் தீர்மானிக்கும்.

இலங்கை ஜனாதிபதி அத்தகைய பொதுமக்கள் வாக்கெடுப்பை தனது விருப்பப்படி ஒத்தி வைக்கவும் உரிமை உண்டு.

(2-4) இன வன்முறை அல்லது மற்ற காரணங்களுக்காக அல்லது வேறு காரணங்களுக்காகவும் இடம் பெயர்ந்தவர்களும் அத்தகைய பொதுமக்கள் வாக்களிப்பில் வாக்களிக்க உரிமை உண்டு. அவர்கள் எந்த இடத்திலிருந்து வெளியேறினார்களோ அந்த இடங்களுக்கு திரும்ப தேவையான சூழ்நிலைகள் உருவாக்கப்படும்.

(2-5) அத்தகைய பொது மக்கள் வாக்கெடுப்பு நடைபெறும் பொழுது, இலங்கை தலைமை நீதிபதி தலைமையில் இலங்கை அரசால் குறிப்பிடப்பட்டு, இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒருவர், கிழக்கு மாகாணத் தமிழர்களின் பிரதிநிதிகளால் குறிப்பிடப்பட்டு, ஜனாதிபதியாய் நியமிக்கப்படும் ஒருவர் இடம் பெறும் கமிட்டியால் கண்காணிக்கப்படும்.

(2-6) பொதுமக்கள் வாக்கெடுப்பு முடிவு சாதாரண பெரும்பான்மை அடிப்படையில் அமையும்.

(2-7) பொதுமக்கள் வாக்கெடுப்புக்கு முன்னதாக இலங்கை சட்டங்கள் அனுமதிக்கும் பிரசார முறைகளுக்கும் உரிமை உண்டு.

(2-8) மாகாண கவுன்சில்களுக்கான தேர்தல் அடுத்த 3 மாதங்களுக்குள் 1987 டிசம்பர் 31ந்தேதிக்கு முன்னதாக நடைபெறும், வடக்கு, கிழக்கு

(7-ம் பக்கம் பார்க்க)

# இலங்கை-இந்திய ஒப்பந்தம்:

# ஒரு கண்ணோட்டம்

**இந்திய-இலங்கை ஒப்பந்தங்கள் குறித்து சாதக பாதகமான கருத்துகள் வந்த வண்ணம் இருக்கின்றன: அது பற்றி விமர்சிக்கும் இக் கட்டுரையை பிரசுரிக்கிறோம். மேலும் கருத்துக்களை வரவேற்கிறோம்.**

கொழும்பு ஆனந்த குமாரதாசன்

## இந்தியா எமக்கு உதவியளித்ததேன்

இலங்கைப் பிரச்னைக்கு தீர்வு காணும் முயற்சியில் இந்தியா அக்கறைக்காட்டியதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஏகாதிபத்திய கலானித்துவ ஆட்சியின் கீழ் எடுக்கப்பட்டு சுரண்டப்பட்ட பின்தங்கிய நாடுகளில், ஏகாதிபத்திய ஆட்சிகளை எதிர்த்து ஜனனாயக தேசிய விடுதலைப் போராட்டத்தை நடத்தி வெற்றியைக் கண்ட முதல்நாடு இந்தியாவாகும். இந்தியாவில் எழுந்த இந்த போராட்டத்தின் கொள்கை அடித்தளமாகிய ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்ச்சிகள், உலகமெங்கும் வெடித்தெழுந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் தலைமைப்பீடத்துக்கு இந்தியாவை உயர்த்தியுள்ளன.

எனவே, எங்கெங்கே மக்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிறார்களோ அங்கங்கே இந்தியா அவர்களுடன் துணையாக நின்று உதவி அளிப்பதை நாம் இன்று தெளிவாக அவதானிக்கலாம். இந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்ச்சியே இந்தியாவை இலங்கை மக்களுக்கு உதவியாக முன்வரவைத்த முதல் முதல் காரியமாகும்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் இலங்கைக்காக தீட்டியுள்ள திட்டங்கள் வெற்றியைக் கண்டால் அது இந்தியாவின் தேசிய பாதுகாப்பை பெரிதாகப் பாதிக்கும் பேராபத்தாக வளர்ந்தோங்கும் என்ற அறிவு இந்தியா முன்வந்து இலங்கை மக்களுக்கு உதவியளிப்பதற்கான இரண்டாவது காரியமாகும்.

## இலங்கை பிரச்னையை தீர்ப்பதற்கான வழி

இலங்கை பிரச்னையை தீர்ப்பதற்கு ஏற்படுத்தப்படும் எந்த நடவடிக்கையும் இருமுக்கிய அம்சங்களை கொண்டதாக இருக்க வேண்டும். ஒருபுறத்தில் அது இலங்கையின் சர்வதேச நிலைப்பாட்டையும் இந்த நிலைப்பாட்டின் விளையாக ஏற்பட்டுள்ள சர்வதேச அரசி பொருளாதார உறவுகளையும் மாற்றி அமைப்பதற்கான வாய்ப்பின் அளிக்க வேண்டும்.

மறு புறத்தில் இவ்வாறான நடவடிக்கை எதுவும், இலங்கையில் உள்நாட்டு அரசியல் அமைப்பிலும் உறவுகளிலும் ஏகாதிபத்திய ஆட்சிகள்.... தமக்கு சாதகமான முறையில் பயன் படுத்தக் கூடிய இன, மத முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும், அல்லது அவற்றின் பாதிப்புகள் இயலுமான அளவு குறைக்கப்பட்டு அவை முற்போக்கான வழியில் திசை திருப்புவதற்கான வழிகள் வகுக்க வேண்டும்,

## கொள்கையும் விளக்கமும்

இலங்கை இந்திய நட்புறவு ஒப்பந்தம் எந்த அளவிற்கு இந்த இரு அம்சங்களைக் கொண்டுள்ளதோ அது அந்தளவிற்கு முற்போக்கான தென்பதெனவும் கருதப்படலாம்.

1. இந்த ஒப்பந்தம் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் உள்ள நட்புறவுகளில் வேர் ஊன்றியது.
2. அது இலங்கையின் இனப்பிரச்னையை தீர்ப்பதன் மூலம் இலங்கையின் மக்களின் நலன்களை பாதுகாத்து உறுதிபடுத்தும் நோக்கத்தை கொண்டது.

இலங்கையின் சர்வதேச நிலைப்பாடும் அதனடிப்படை அமைந்துள்ள சர்வதேச அரசியல் பொருளாதார உறவுகளையும் இலங்கை இனப்பிரச்னைக்கு ஓர் தீர்வு காண்பதன் மூலம் இந்தியாவிற்கு சாதகமான முறையில் மாற்றியமைக்கப்படும் உத்தரவாதம் இவ்விரு கொள்கைகளின் அடிப்படையில் அமைந்தது. அதாவது, இலங்கை தமது சர்வதேச நிலைப்பாட்டையும் அரசியல் பொருளாதார உறவுகளையும் மாற்றும். இந்தியா இலங்கையின் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கான உதவிகளை அளிக்கும்.

3. இந்த ஒப்பந்தம் இலங்கைத் தீவு வெவ்வேறு இனங்களையும் மதங்களையும் கொண்ட சமுதாயத்தின் இருப்பிடம் என்றகருத்தை ஏற்றுக்கொண்டு, இந்த அனைத்து இனங்களினது மதங்களினதும் சகல நலன்கள் பாதுகாக்கப்பட்டு பேணி வளர்க்கப்படும் என்ற உத்தரவாதத்தை கொண்டுள்ளது.
4. இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழீழ மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டு, தமிழீழ மக்கள் தொடர்ந்து இந்த பிரதேசங்களில் வேறு இனங்களுடன் வாழ்ந்து வருகின்றன என்று எடுத்துக்காட்டி இவர்கள் இவ்வாறாக தொடர்ந்து வாழ்வ

(6-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கான உத்தரவாதத்தைக் கொண்டுள்ளது.

இந்த இரண்டு கொள்கைகள், இலங்கை தீவானது முற்று சிங்கள தேசிய இனத்தின் தனிச் சொந்தப்பிரதேசம் என்ற நிலவுகின்ற சிங்கள தேசிய தத்துவம், யதார்த்தத்திற்கு அப்பாலானதும் உண்மையில்லாத்தது என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையில் பல்வேறு தேசிய இனங்கள் உள்ளன என்ற இனங்களின் உரிமைகளும் நியாயமானவை என்றும் பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டியன என்றும் வலியுறுத்துகின்றன.

5. இந்த ஒப்பந்தம் இலங்கையின் தேசிய சுதந்திரத்தையும் ஒற்றுமையையும் பாதுகாக்கும் நோக்கத்தை கொண்டது.

6. இலங்கையின் அனைத்து தேசியஇனங்களின் உரிமைகளை பாதுகாத்து உறுதி படுத்துவதன் மூலம் இலங்கையின் தேசிய சுதந்திரத்தையும் பிரதேச ஒற்றுமையையும் பாதுகாக்க தயாராக நிற்கும் அரசியல் சக்திகளை பலப்படுத்துவதன் மூலம் இலங்கையின் இன முரண்பாடுகளை முற்போக்கான வழியில் திசை திருப்பி நாட்டின் அரசியல் சமநிலையை உறுதிபடுத்தும் நோக்கத்தை இந்த ஒப்பந்தம் கொண்டுள்ளது.

இந்த இரு கொள்கைகளின் அடிப்படையில், இலங்கையின் ஒருமைப் பாட்டையும் சுதந்திரத்தையும் பாதுகாத்து, இலங்கையின் தேசிய இனங்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாத்து உறுதிபடுத்தும் முற்போக்கான பாதைவழியாக இலங்கையின் இனப்பிரச்னையை தீர்ப்பதற்கான வழிகளை இந்த ஒப்பந்தம் வகுக்கின்றது.

இந்த ஒப்பந்தத்தின் அடித்தளமாக அமைகின்ற இந்த ஆறு கொள்கைகளையும் நாம் எடுத்துப்பார்த்தால், முதல் இரண்டு இந்தியாவின் நலன்களை அடிப்படையாகக்கொண்டுள்ளனவாக இருப்பதைக் காணலாம்,

(அடுத்த இதழில் முடியும்)

## தாயகம் திரும்பியோரும் சமூக நல அமைப்புகளும் :

# சிந்தனை மாற்றம் வேண்டும் !

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

உள்ளூர்வாசி ஒருவர் தாயகம் திரும்பியவர் ஒருவரை பார்த்து நீங்கள் எந்த ஊர் என்று கேட்டால் உடனே நான் சிலோன் என சொல்வார் அப்படிச் சொல்வதில் அவருக்கு என்ன பெருமையோ தெரியாதோ, அவர் ஏன் தன் பூர்வீக ஊரான திருநெல்வேலி என்றோ, வந்தவாசி என்றோ,பெரம்பலூர் என்றோ சொல்லக்கூடாது ? அதில் ஏன் தாழ்வு மனப்பான்மை. அப்படி சிலோன் என சொல்வதால் உள்ளூர் மக்களிடம் இருந்து தன்னைத்தானே பிரித்துக் கொள்கிறார் என்று அர்த்தம்.

தங்களது பூர்வீக ஊரில் சிறிது விவசாயம் நிலம் உள்ளவர்கள் சென்று குடியேறினார்கள். 10 ஆண்டுகளுக்கு பின் அவர்களின் வாழ்க்கை நிலையை ஆராய்ந்தால், அவர்கள் தாயகம்திரும்பியோர்என்ற அடையாளம் காண்பது கடினம் அவர்களின் நடை, உடை, பாவணை,வாழ்க்கை அமைப்பு அனைத்தும் மாறிவிட்டன. உள்ளூர் மக்களுடன் அவர்கள் இரண்டற கலந்து விட்டார்கள். உள்ளூர் வாசிகளும் அவர்களை எவ்வித பாராபட்சமும் இன்றி உபசரித்து ஏற்றுக் கொண்டனர். ஆனால் தாயகம்திரும்பியோர் கூட்டம் கூட்டமாக் சென்று குடியேறிய இடங்களில் எல்லாம் உள்ளூர் வாசிகளுடன் உறவு கொள்ளாமல், தனித்து காலனி அமைத்துக் கொண்டனர். அப்படி காலனிகளுக்கும் குக்கிராமங்களுக்கும் புதிய புதிய பெயர்களை சூட்டிக் கொண்டனர். தமிழ் பேசும் முறை, நடை, உடை, பாவனை அனைத்திலும் எவ்வித மாற்றமும் இல்லை மாற்றிக் கொள்ளவும் தயாராக இல்லை. எனவே அவர்கள் அண்டை கிராம மக்களிடம் இருந்த தம்மைத் தாமே பிரித்துக் கொண்டனர். அதனால் உள்ளூர் மக்களும் அவர்களை "சிலோன்காரன்" என ஒதுக்கிவைத்துவிட்ட துர்பாக்கிய நிலைமையை காண்கின்றோம்.

இது எதை காட்டுகிறது. இலங்கையில் கடந்த ஒரு நூறு ஆண்டுகளாக என்ன தவறை செய்தோமோ அதே தவறை மீண்டும் நம் தாய்நாட்டில் செய்துகொண்டு இருக்கிறோம். இலங்கையில் சிங்கள மக்களிடமிருந்து "இந்தியத் தமிழர்கள்" என்று நம்மை பிரித்து பதவிசுகம் கண்டார்கள் அரசியல் வாதிகளும் தொழிற்சங்க தலைவர்களும்.அவர்களின் அரசியல் இலாபத்திற்காக நம்மை சிங்கள மக்களிடம் இருந்து நம்மை தனிமை படுத்தாமல் அந்நாட்டின் கலை, கலாச்சாரம் மொழியை கற்றிருந்தால் தாய் நாட்டில் "அகதிகள்" என ஏளனப் படுத்தப்பட்டிருப்போமா? சிங்கப்பூர், மலேசியா, சுரிநாம், மொரீசஸ், நாடுகளில் வாழும் இந்தியர்கள் இன்று அந்நாட்டு மக்களுடன் ஐக்கியமாகி சுபீட்சமாக வாழவில்லையா? இலங்கையில் வாழும் இந்திய மக்களுக்கு மட்டும் ஏன் இந்த நிலைமை ? சிந்தித்து பார்க்க வேண்டும். கல்வி, அறிவு அற்ற நம் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலே மகாத்மா காந்திக்கு ஜே! பாரத மாதாவிற்கு ஜே !! என கோசம் எழுப்ப செய்து, சிங்கள மக்கள் மத்தியில் இருந்து நம்மை பிரித்து ஆண்டார்கள்.

**என். கே. பி.**

அதன் விளைவை இன்று நாம் அனுபவிக்கிறோம். அதே நிலை, அடுத்த நம் சந்ததியினருக்கும் வர வேண்டுமா ? நம்மையும், நம் வருங்கால சந்ததியினரையும், நம் தாய்நாட்டில் "சிலோன்காரன்" என பிரித்து பார்க்க வேண்டுமா ?

இதை போக்க நம் மத்தியிலே சிந்தனை மற்றம் வேண்டும். நம் பழக்க வழக்கங்களை மாற்றி அமைத்துக் கொண்டு, இவ்வூர் மக்களைப் போல் வாழ்ந்து பழக வேண்டும், இவ்வூர் மக்களையும் நம் சகோதரர்களாக ஏற்றுக் கொள்ளவேண்டும்,இங்குமற்றவர்களைமதித்து வாழவேண்டும் நேசிக்க வேண்டும் அன்பு காட்ட வேண்டும், பணிவு வேண்டும்; உடுக்கும் உடை, உண்ணும் உணவு, திருமணம் பெண் கொடுப்பது பெண் எடுப்பது முதல் அனைத்து விசயங்களிலும் ஏன் உள்ளூர் மக்களுடன் இணைந்து செல்லக் கூடாது இந் நோக்கில் நம் சிந்தனை மாற்றம் ஏற்படாத வகையில் நாம் நம்மையே பிரித்துக் கொள்கிறோம். உள்ளூர் மக்களிடம் இருந்து பாகுபாடு படுத்தப்படுவோம்.

மறுவாழ்வு திட்டங்களை விட இப்படிப்பட்ட சமூக சிந்தனை மாற்றம் அவசியம்.

இந்திய நாட்டில் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள மக்களின் நல்வாழ்வுக்காக பல்வேறு திட்டங்கள் உள்ளன.

இதற்காக கோடான கோடி ரூபாயை மானில , மத்திய அரசும் செலவு செய்சிறது குடும்ப கார்டையும், பாஸ்போர்ட்களையும் காட்டி மறுவாழ்வு திட்டத்தை பெறுவதை விட மேற்கண்ட திட்டங்களில் நம்மை இணைத்துக் கொண்டால் விரைவில் நம் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ளலாம் கண்டியிலே கண்ட குடும்பகார்டு மண்டபத்தில் பெற்ற கடனோடு முடிந்து விட்டது. பல மக்களுக்கு தேயிலை, ரப்பர் தோட்ட மறுவாழ்வு திட்டத்தை தவிர மன்ற திட்டங்கள் அனைத்தும் தோல்வியையே கண்டுள்ளன. இந் நிலையில் ஏழை, எளிய மக்களுக்கு கிடைக்கும் திட்டத்தை முறைப்படி பெற்றுக் கொள்வதே சிறந்தது.

இது சம்பந்தமான விழிப்புணர்ச்சி முகாமையும், பயிற்சி முகாமையும் தொண்டு நிறுவனங்கள் நடத்த வேண்டும் சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவி பெற்று, அரசோடு போட்டி போட்டு பல மறுவாழ்வு திட்டங்களை மேற்கொள்வதை விட இப்படிப்பட்ட பயிற்சிகள் நீண்ட கால கண்ணோட்டத்தில் நல்ல பயன் மெறும் என்பதில் ஐயமில்லை.

([illegible] பக்கத் தொடர்ச்சி)

மாகாண தேர்தல்களின் போது இந்தியப் பார்வையாளர்கள் வரவேற்கப்படுவார்கள்.

(2-9) 1987ம் ஆண்டு 15ந்தேதி வாக்கில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவசர நிலை நீக்கப்படும்.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தான 24-மணி நேரத்திற்குள் போர் நிறுத்தம் அமலுக்கு வரும். போராளிகள் தங்களது ஆயுதங்களை இலங்கை அரசு குறிப்பிடும் அதிகாரிகளிடம், ஒத்துக் கொள்ளப் பட்ட நடைமுறைப்படி ஒப்படைப்பார்கள். போர் நிறுத்தம், ஆயுத ஒப்படைப்புஆகியவைகளின் உடன் விைசரவாக இலங்கை ராணுவமும் மற்ற பாதுகாப்புப் படைகளும் 1987ம் ஆண்டு மே மாதம் 25ந்தேதி நிலவரப்படி முகாம்களுக்கு திரும்புவார்கள். ஆயுத ஒப்படைப்பு, இலங்கை பாதுகாப்பு படைகள் முகாம்களுக்கு திரும்புவது போர் நிறுத்தம்-ஏற்பட்ட 72 மணி நேரத்திற்குள் நடைபெறும்.

(2-10) வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சட்ட அமல், பாதுகாப்பு பராமரிப்பு பணிகளுக்காக நாட்டின் மற்ற பகுதிகளில் உள்ளது போன்ற அமைப்புக்கள் பயன்படுத்தப் படும்.

(2-11) எல்லா அரசியல் கைதிகளுக்கும், பயங்கரவாதச் சட்டம், மற்ற அவசர நிலைச் சட்டங்களின் கீழ் சிறையில் உள்ள, வழக்கு விசாரணையில் உள்ள அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும். தேசிய வாழ்க்கை நீரோட்டத்திற்கு இளைஞர்களான போராளிகளைக் கொண்டுவர விசேஷ முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொள்ளும். இந்த முயற்சிகளுக்கு இந்தியா ஒத்துழைப்பு தரும்.

(2-12) மேலே கண்ட ஷரத்துக்கள் அனைத்தையும் இலங்கை அரசு ஏற்று அமல் செய்யும். மற்றவர்களும் அவ்வாறே செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

(2-13) இந்த தீர்மானங்களுக்கான நடைமுறை ஏற்கப்படும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட திட்டங்களை இலங்கை அரசு உடனடியாக அமல் செய்யும்.

(2-14) இந்த தீர்மானங்களுக்கு இந்திய அரசு உத்தரவாதம் அளிக்கும். இந்த திட்டங்களை அமல் படுத்துவதில் ஒத்துழைக்கும்.

(2-15) இந்த திட்டங்கள் 4-5-198ந் தேதிக்கும் 19-12-198ந் தேதிக்கும் இடைக் காலத்தில் விவாதிக்கப்பட்ட திட்டங்களுக்கு சம்மதிப்பதை நிபந்தனையாக கொண்டுள்ளன. மேற்கண்ட காலத்தில் இறுதியாக்கப்படாத விபரங்கள் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் தேதியிலிருந்து ஆறு வார காலத்திற்குள் இந்திய-இலங்கை பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படும். மேலும் இலங்கை அரசோடு, இந்திய அரசு நேரடியாக இந்தத் திட்டங்களை அமல் செய்ய ஒத்துழைப்பதையும் நிபந்தனைகளாக கொண்டுள்ளன.

(2-16) மேலும் இந்த ஒப்பந்த திட்டங்களை இலங்கையில் செயல்படும் எந்த ஒரு போராளிகளின் குழுவாவது ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் இந்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் இந்த திட்டங்கள் நிபந்தனைகளாக கொண்டுள்ளன.

இதன்படி (ஏ) இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு விரோதமான நடவடிக்கைகளுக்கு இந்தியப்பகுதி பயன்படாமல் பார்த்துக் கொள்ள இந்தியா தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளும். (பி) இலங்கை கடற்படையுடன் தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கைகளைத் தடுக்க இந்திய கடற்படை, கடலோர காவல் படை ஒத்துழைப்பு தரும். (சி) இந்த திட்டங்களை அமல் செய்ப ராணுவ உதவி வழங்கும்படி இலங்கை அரசு கோரினால் கோரிய உதவியை கோரிய சமயத்தில் இந்தியா ஒத்துழைப்பு வழங்கும். (டி) இலங்கையில் உள்ள இந்தியக் குடி மக்களை இந்தியாவுக்கு அழைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு துரிதப்படுத்தும். உடன் விளைவாக தமிழ்நாட்டிலிருந்து தமிழ் அகதிகள் இலங்கை திரும்பவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.


(ஈ) வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் அனைத்து இனத்தவரின் உயிருக்கும் உயிருக்கும் உடலுக்கும் ஊறு ஏற்படாமல் பாதுகாப்பை உறுதி செய்ய இந்திய - இலங்கை அரசுகள் ஒத்துழைக்கும்.

(2-17) இந்த ஒப்பந்தத்தில் கண்டுள்ள வடக்கு கிழக்கு மாகாண தேர்தல்களில் அனைத்து இனத்தவரும் சுதந்திரமாக, முழுமையாக, நேர்மையாக பங்கு பெறுவதை இலங்கை அரசு உறுதி செய்யும். இதன் தொடர்பாக இலங்கை அரசுக்கு இந்திய அரசு முழு ஒத்துழைப்பு தரும்.

(2-18) இலங்கையின் அரசு அலுவல் மொழியாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் முதலியன இருக்கும்.

(8-ம் பக்கம் பார்க்க)

# 'உங்கள் வீட்டை நீங்களே கட்டுங்கள்!'



'உங்கள் வீட்டை நீங்கள் கட்டுங்கள்' என்ற கோஷத்தை முன் வைத்து அய்லண்ட் அறக்கட்டளை செயலில் இறங்யுள்ளது.

இதன் ஆதரவில் ஹொரான்னட்டியில் கூட்டு முயற்சியுடன் சிரமதான பணி மூலம் தமது நிலத்தில் - வீட்டுமனைகளைத் திருத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சிரமதான பணியில் அய்லண்ட் அறக்கட்டளையைச் சார்ந்த அங்கத்தவர்கள் தம முழு பங்களிப்பை அளித்துள்ளதோடு தாயகம் திரும்பியோர்களுக்காக வீடு கட்டும் பணியில் தமது கூலியில்லாத உழைப்பையும் அளித்து வருகின்றனர். O

Editor & Publisher: T S RAJU, 1. South Gangai Amman koil 2nd Street, Madras 600094. Printer: L.S. Srinivasan at Jai Kalidas Press 29, B. E Colony, 4th Streat, Madras-600024

Regd No. R.N. 42556/83 Regd. No, TN/MS (C) 702

MAKKAL MARUVAZHVOO

மக்கள் மறுவாழ்வு

முகவரி :
அஞ்சல் பை எண். 5560
சென்னை-600094

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

(3)இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதும்அமலுக்கு வரும்.

(இந்த ஒப்பந்த வாசகத்தின் இறுதியில் இந்தியப் பிரதமர் ராஜீவும், இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் கையெழுத்திட்டுள்ளனர்.)

## உடன்படிக்கையின் இணைப்பு

(1) மேற்படி ஒப்பந்தத்தில் இரண்டாம் பந்தியிலும், துணைப்பந்திகளிலும் குறிப்பிட்டுள்ளவைகளைச் செயற்படுத்த இந்திய தேர்தல் கமிசனின் பிரதிநிதி ஒருவருக்கு இலங்கை ஜனாதிபதி அழைப்பு விடுப்பார்.

(2) மேற்படி ஒப்பந்தத்தில் பற்றி 2. 8.ல் குறிப்பிட்டுள்ள படி, மாகாண கவுன்சில்களுக்குத் தேர்தல் நடத்தவும், இத் தேர்தல் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெற, வடக்கு கிழக்குப் பகுதியிலுள்ள இலங்கை இராணுவம் அனைத்தும் வாபஸ் வாங்கப்படும், என இரு நாட்டுத் தலைவர்களும் உடன்படுகின்றார்கள்.

(3) மொழிப்பிரச்சினையின் காரணமாக, இலங்கை இராணுவப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட, PARAMI ITARY யில் உள்ளவர்களை, இலங்கை ஜனாதிபதி தன் விருப்பதிதிற்கிணங்க, நிரந்தர இராணுவத்திற்குச் சேர்த்துக் கொள்வார்.

(4) தமிழ் தீவிரவாதிகள் தத்தம் ஆயுதங்களை இலங்கை ஜனாதிபதி நியமித்துள்ள அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்கு இரு நாட்டுத் தலைவர்களும் உடன் படுகின்றார்கள், இந்த ஆயுத ஒப்படைப்பு இலங்கை, இந்திய செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரிகளின் முன்னிலையில் நடைபெறும்,

(5) தகுதிபெற்ற இந்திய இலங்கை அதிகாரிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் ஜூலை மாதம் 31ம் தேதி முதல் யுத்த நிறுத்தம் முறைப்படுத்தப்படும் என இரு நாட்டுத் தலைவர்களும் உடன் படுகின்றனர்கள்.

(6) மேற்படி ஒப்பந்தத்தில் பந்தி 2. 14லும். பந்தி 2.16 (சி) லும் குறிப்பிட்டுள்ளதாக அமைய, யுத்த நிறுத்தத்தை உறுதிப் படுத்தலாம். அமல் செய்யவும், தேவையெனில் அமைதி காக்கும் இந்திய இராணுவப் பிரிவை இலங்கை ஜனாதிபதி அழைக்கலாம் என, இரு நாட்டுத் தலைவர்களும் உடன் படுகின்றார்கள். என்பது முழு உடன்படிக்கையின் முழு விபரமாகும். O

# மழை விட்டும் தூவானம் விடவில்லை

மழை விட்டும் துவாணம் விடவில்லை என்று சொல்வது போல இலங்கையில் தமிழா பிரச்னைகள் ஓய்ந்து அமைதி ஏற்படவில்லை.

வடகிழக்கில் இலங்கை சிங்கள இராணுவத்தின் கொடுமைக்கு பயந்து வெளியேறியவர்கள் எல்லாம் புதிய நம்பிக்கையோடு தமது விடுகளுக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அச்சத்துடன் வாழ்ந்த பொதுமக்கள் நிம்மதி மூச்சு விட்டு அமைதி அடைந்துவருகின்றனர்.

ஆனால் இப்போது போராளி குழுக்களிடையே பயங்கரமான மோதல் தோன்றியிருக்கிறது. பல குழுக்களுக்கிடையில் ஏராளமானவர்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பது துயரமும் அதிர்ச்சியும் மிகுந்த செயல்களாகும்.

இலங்கை இராணுவத்திற்கு பயந்து வாழ்ந்த அச்சம் போய் போய் போராளிகளின் வெறி செயலுக்கு ஆளாகி விடுவோமோ என்ற அச்சத்திற்கு ஆளாகியுள்ளனர். O

## கூட்டுறவு வங்கித் தேர்தலில் வெற்றிபெற்றோர் யார் ?

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் சார்பாளர்களை (டெலிகேட்டுகள்) தெரிவு செய்வதற்கான தேர்தல் கடந்த ஆகஸ்ட் 31ந்தேதி நடைப் பெற்றது.

வெற்றி பெற்றோர் பெயர் பட்டியல் அடுத்த இதழில் பிரசுரமாகும். O

## தமிழர் உயிருக்கு உத்தரவாதம்

"இலங்கையில் அமையவிருக்கும் தமிழ்மாநிலம் இந்திய துணைக்கண்டத்தில் மாநிலங்களுக்கு இருக்கும் அதிகாரங்களைக்கொண்டதாக அமைய வேண்டும் மாநில அரசிற்கே காவல் துறையில் முழு அதிகாரங்களைக் கொண்டதாக அமைய வேண்டும் மாநில அரசிற்கே காவல் துறையில் முழு அதிகாரங்களையும் அளிக்கவேண்டும் அதுவே தமிழ் மக்களின் உயிருக்கு சந்திரவரதாக அமையும்" அனைத்திலங்கை எம். ஜி. ஆர். மன்ற பொதுச் செயலாளர் நெய்னார் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். O

## பாராட்டு கூட்டம்

இலங்கைத் தமிழர்களுக்காக பாடுபட்ட டாக்டர் இரா. ஜனார்தனம் எம். ஏ., பிஎச்டி, அவர்கட்கு 7-8-87 அன்று தேவ நேயப்பாவாணர் அரங்கில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலை முன்னணித் தலைவர்கள் மற்றும் பலர் கலந்துக் கொண்டு பேசினர். O

## கலாச்சாரக் கழகம்

'இலங்கை இந்திய கலாச்சாரகழகம்' தனது ஆரம்ப கூட்டத்தை 8-8-87 அன்று தேவ நேயப்பாவாணர் அரங்கில் நடத்தியது.

இக்கூட்டத்தில், திரு அமிர்தலிங்கம், வழக்கறிஞர் திரு. வானமாமலை, திரு. டி. பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். O

## 'மக்கள் மறுவாழ்வு' 5வது ஆண்டு மலர்

வெளி வர இருப்பதால் இவ்விதழ் குறைந்த பக்கங்களில் வெளிவருகிறது. அடுத்த இதழ் அதிக பக்கங்களில் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர்